செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 275 நாள் 10/5/18

ப.வெ(பி3) 5278/2018

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர்.9
நாள்: 10.05.2018.

## பத்திரிக்கை செய்தி

வேலூர் மாவட்டத்தில் உள்ளடங்கிய பதிமூன்று வட்டங்களிலும் 1427-ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) 2018 மே திங்கள் 17-ஆம் தேதி ஆறு வட்டங்களிலும், மே 23-ஆம் தேதி ஏழு வட்டங்களிலும் அரசு விடுமுறை நாட்கள் மற்றும் வாரத்தின் முதல் திங்கட்கிழமை தவிர்த்து இதர நாட்களில் கீழ்க்கண்டவாறு துவங்கப்படவுள்ளது.

| வ. எ. (1) | வட்டத்தின் பெயர் (2) | வருவாய்த் தீர்வாய அலுவலர் (3) | வருவாய்த் தீர்வாயம் நடைபெறும் நாட்கள் (4) | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஆற்காடு | மாவட்ட ஆட்சியர், வேலூர். | 17.05.2018 | to | 29.05.2018 |
| 2. | வேலூர் | மாவட்ட வருவாய் அலுவலர், வேலூர். | 23.05.2018 | to | 29.05.2018 |
| 3. | நாட்றம்பள்ளி | சார் ஆட்சியர், திருப்பத்தூர். | 17.05.2018 | to | 22.05.2018 |
| 4. | காட்பாடி | மாவட்ட ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்,வேலூர். | 17.05.2018 | to | 25.05.2018 |
| 5. | திருப்பத்தூர் | மாவட்ட வழங்கல் அலுவலர், வேலூர். | 17.05.2018 | to | 24.05.2018 |
| 6. | அணைக்கட்டு | தனித்துணை ஆட்சியர் (முத்திரை கட்டணம்), வேலூர். | 17.05.2018 | to | 23.05.2018 |
| 7. | வாலாஜா | வருவாய் கோட்ட அலுவலர், இராணிப்பேட்டை. | 17.05.2018 | to | 25.05.2018 |
| 8. | வாணியம்பாடி | மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்),வேலூர். | 23.05.2018 | to | 29.05.2018 |
| 9. | குடியாத்தம் | வருவாய் கோட்ட அலுவலர்,வேலூர். | 23.05.2018 | to | 25.05.2018 |
| 10. | பேர்ணாம்பட்டு | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், வேலூர். | 23.05.2018 | to | 29.05.2018 |
| 11. | ஆம்பூர் | மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர். | 23.05.2018 | to | 29.05.2018 |
| 12. | நெமிலி | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்), வேலூர். | 23.05.2018 | to | 01.06.2018 |
| 13. | அரக்கோணம் | தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வேலூர். | 23.05.2018 | to | 01.06.2018 |

நிலவரி கணக்குகள், பட்டா மாற்றம், பட்டா நகல் கோருதல், அரசு நலத் திட்டங்களின் கீழ் நிதி உதவி கோருதல் மற்றும் இதர தேவைகள் தொடர்பான மனுக்கள் வருவாய்த் தீர்வாய அலுவலரால் பெறப்படும். ஒரு கிராமத்திற்கு சம்பந்தப்பட்ட மனுக்கள் அந்த கிராம கணக்குகளின் தணிக்கை நாளில் தான் கொடுக்கப்பட வேண்டும். தணிக்கை நாட்களுக்கு முன்னதாக கொடுக்கப்படும் மனுக்களும் அதற்குரிய கிராம தணிக்கை நாட்களில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே இத்தருணத்தை பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள மாவட்ட ஆட்சியர் திரு.சி.அ.ராமன்.,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

ஒம்/-சி.அ.ராமன்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர் மாவட்டம்.

செ.ம.தொ.அ
வேலூர்- 9.

//ஆணையின்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக